06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

## தரம் 06

முதலாம் தவணை

### அலகு 05 – தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்




தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

REGISTER NOW 0778054232

AGARAM DHINES ONLINE ACADEMY

# தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்

கடிதம் எழுதுதல் பள்ளி வாழ்விலும் பிற்கால வாழ்விலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. எண்ணிப் பார்த்தால் கடிதம் என்பது எழுதப்படும் பேச்சு என்பது புலப்படும். தூர உள்ள ஒருவரிடம் நேரிற் பேச முடியாத சந்தர்ப்பங்களில் அவரோடு கடிதம் மூலம் தொடர்பு வைக்கின்றோம்.

கடிதங்களில் பலவகை உண்டு அவற்றிற் சில -

1. **உறவுமுறைக் கடிதங்கள்:-** சுற்றத்தார், நண்பர் முதலியோர் எழுதிக் கொள்வன.
2. **அலுவலகக் கடிதங்கள்**:- சுற்றறிக்கை, கட்டளைகள், வாணிபம் தொடர்பானவை.
3. **அழைப்புக் கடிதங்கள்:-** திருமணம், குடிபுகுதல், விருந்து, கூட்டம் போன்ற விழாக்களுக்கானது.
4. **விண்ணப்பக் கடிதங்கள்**:- வேலைக்கு மனுச் செய்தல். குறைகளை முறையிடல் போன்றன.
5. **அனுதாபக் கடிதங்கள்**:- நேர்ந்த துன்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறுதல் கூறி எழுதுவது.
6. **வாழ்த்துக் கடிதங்கள்**:- இன்ப நிகழ்ச்சிகளைப் பாராட்டி எழுவது.
7. **பத்திரிகைக் கடிதங்கள்**:- பொதுசன அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பனவாக எழுதுவது.
8. **நன்றியறிப்புக் கடிதங்கள்**:- நன்றி தெரிவித்து எழுதுவது.

கடிதங்கள் எல்லாம் சில பொது உறுப்புக்களை உடையன. அவையாவன :-

1. **முகப்பு**
2. **உடல்**
3. **முடிப்பு**
4. **முகவரி**

உறவுமுறைக் கடிதங்களைப் பெற்றோர், பிள்ளைகள், நண்பர், உறவினர் தமக்குள்ளே ஒருவர்க்கொருவர் கடிதம் எழுதுவர். இக்கடிதங்கள் தமது நட்புத் தொடர்பையும், உறவுத் தொடர்பையும் பேணி வளர்த்தற் பொருட்டே ஆகும். அவ்வகையில் உறவுமுறைக் கடிதமான "தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்" ஒன்றைப் பாடப் புத்தகத்தில் வாசிப்போம்.

Agaram Dhines

**அ. அடைப்பினுள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.**

1. தேவதாசன் …………………… தீண்டி இறந்தான். (அரவு, அறவு)
2. பொன் ……………………… ஒளிரும் (உறுக்க, உருக்க)
3. இராமன் மர………………… தரித்துக் காடு சென்றான். (உரி, உறி)
4. பாட்டி பாலைக் ……………………… காய்ச்சிப் பருகினார். (கலந்து, கறந்து)
5. ……………….. பொய்த்தாலும் பாரி வள்ளல் கொடையில் பொய்யான். (மாறி, மாரி)

**ஆ. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. பழைய ……………………...
2. கிடைத்தது ……………………..
3. விரிவாக ……………………..
4. தெளிவு ……………………..
5. விருப்பு ……………………
6. குறை ……………………...
7. இயற்கை ……………………..
8. முடியும் ……………………..
9. மகிழ்ச்சி ……………………..
10. வெளி உறுப்பு ……………………..

**இ. பின்வரும் இரட்டைக் கிளவியினை வாக்கியத்தின் இடைவெளியில் வைத்து நிரப்புங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| சிடுசிடு | புறுபுறு | குறுகுறு | கலகல | நெருநெரு |

1. மரத்தில் இருந்த புறா ……………………… எனச் சத்தமிட்டது.
2. தான் செய்த குற்றத்தால் உள்ளம் …………………..எனத் துன்பம் தருவதைக் கயவன் உணர்ந்தான்.
3. வெளிப்படையாகப் பேசாது ……………எனப் பேசுபவர்கள் உள்ளத் தெளிவற்றவர்களே.
4. ஆசிரியர்களின் முகங்களில் ……………………. ப்புப் பண்புகள் இருத்தல் கூடாது.
5. ……………………. என மகிழ்வுடன் பேசுபவர்களை அனைவரும் விரும்புவர்.

**ஈ. தடித்த எழுத்துக்குப் பொருத்தமான அடைப்புக் குறிக்குள் உள்ள சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.**

1. குனிந்து என்பதன் எதிர்ப் பொருட் சொல். (வளைந்து, எழுந்து, நிமிர்ந்து,நீட்டி)
2. கேடிலா என்பதன் பொருள். (கெடுதல் அற்ற, கேட்காத, கெட்ட)
3. கேள்வி என்பதன் ஒத்த சொல். (கேட்டல், அறிவு, கணையாளி, முரசு)
4. புன்மதி என்பதன் எதிர்ப்பொருட் சொல். (புனைமதி, பழைய, நன்மதி, நல்லமதி)
5. பாதகர் என்பதன் பொருள். (பாவம் செய்பவர், தவறு செய்பவர், பாதாளி)

Agaram Dhines

**உ. பின்வருவனவற்றைப் பொருத்தமுற வாக்கியம் அமையுங்கள்.**

1. சிறுமை: ………………………………………………………………………..
2. எள்ளல்: ………………………………………………………………………..
3. இடும்பை: ……………………………………………………………………….
4. புலம்: ……………………………………………………………………….
5. மாண்பு: ………………………………………………………………………
6. விண்ணவர்: ………………………………………………………………………

**ஊ. கீழே உள்ள இரட்டைக்கிளவியினை (சொற்களை) வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

(உ-ம்) கமகம : மல்லிகைப் பூவின் நறுமணம் கமகமவென வீசியது.

மட மட: ………………………………………………………………………………

படபட: ………………………………………………………………………………

கலகல: ……………………………………………………………………………

குடுகுடு: ………………………………………………………………………………

குசுகுசு: ……………………………………………………………………………

**ஐ. பின்வருவன பெயர்ச் சொல்லாயின் (பெ) எனவும், வினைச் சொல்லாயின் (வி) எனவும் அடைப்பினுள் எழுதுங்கள்.**

1. வந்தான் (………..)
2. செய்வோம் (………..)
3. பாடசாலை (………..)
4. ஓடுகின்றன (………..)
5. போனார் (………..)
6. மலர்ந்தன (………..)
7. மரங்கள் (………..)
8. வீடுகள் (………..)
9. பூ (………..)
10. வைத்தியர் (………..)

**ஒ. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. இக் கடிதத்தை எழுதியவரின் பெயர், விலாசம், திகதி என்பவற்றைத் தருக.
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………
2. நாம் ஏன் சத்துள்ள உணவை உண்ண வேண்டும்?
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………

Agaram Dhines

3. நாம் உண்ணும் உணவு எவ்விதத்தில் எமக்குப் பயன்பட வேண்டும்?
.................................................................................................................
4. சரிவிகித உணவு என்றால் என்ன?
.................................................................................................................
.................................................................................................................
5. சரிவிகித உணவை உண்பதனால் எவ்வித நன்மைகள் ஏற்படும்?
.................................................................................................................
.................................................................................................................
6. ஊட்டச் சத்துக்களின் ஐந்து வகைகளும் எவை?
.................................................................................................................
.................................................................................................................
7. தாதுப்புக்களும், உயிர்ச்சத்துக்களும் எவ்வித நன்மைகளை அளிக்கின்றன?
.................................................................................................................
.................................................................................................................
8. இக்கடிதம் தந்தையால் எந்நோக்கத்துக்காக எழுதப்பட்டது?
.................................................................................................................
.................................................................................................................

**ஓ. கீழே தரப்பட்டுள்ள ஊட்டச்சத்துக்கள் எவ்வகையில் எமக்கு உதவுகின்றன என எழுதுங்கள்.**

**1.** புரதச்சத்து:
.................................................................................................................
.................................................................................................................

**2.** கொழுப்பு,மாச்சத்து:
.................................................................................................................
.................................................................................................................

**ஔ. கீழே கட்டத்துள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்**

| | | | |
|---|---|---|---|
| சரிவிகித உணவு | விடுதி | உணவை | சத்து |
| உயிரை | சித்திரம் | எதிர்ப்பு | |

1. நாம் உடலை வளர்ப்பதற்காக ............................. உண்கிறோம்.
2. உணவில் உள்ள ........................ பொருள் உடலை வளர்க்கிறது.
3. ஊட்டச்சத்து நிறைந்த உணவு ............................ என்பர்.
4. நோய் ...................... சக்தி எம்மிடம் இருப்பின் எம்மை நோய்கள் அணுகாது.
5. மாணவர் தங்கியிருப்பது, படிக்கும் இடம் ........................ஆகும்.
6. உடலைப் பாதுகாப்பவன் ...................... பாதுகாப்பவன் ஆவான்.
7. சுவர் இருந்தால் ..................... தான் கீற முடியும்.

Agaram Dhines

∴ . **தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய ஒத்த சொற்கள் இரண்டினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுங்கள்.**

1. ஆரம்பம் (ஆதி, அந்தம், தொடக்கம், அத்தமனம்)
2. ஆற்றல் (எழுத்து, சக்தி, விருப்பம், வலிமை)
3. உடம்பு (உண்டி, யாக்கை, தேகம், வாரி)
4. சந்திரன் (திங்கள், வெய்யோன், மதி, சீயம்)
5. நட்சத்திரம் (சோமன், தாரகை, உடு. அழல்)
6. மகன் (புதல்வன், மாணவன், தனயன், இளையோன்)
7. ஆசை (இச்சை, இடர், வேட்கை, ஈரம்)

## நிறை உணவு

- ✶ எல்லாச் சத்துக்களும் அடங்கியுள்ள உணவே "நிறை உணவு" எனப்படும்.
- ✶ இவ் உணவில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா ஊட்டச்சத்துக்களும் நிறைந்திருக்கும்.
- ✶ இந் நிறை உணவைச் சமநிலை உணவு, சரிவிகித உணவு எனவும் கூறுவர்.

## வாக்கிய இயைபு

எழுவாய், பயனிலை இயைபுபட எழுதுவோம்.

**அ. பட்டம் பறந்தது.** **ஆ. கடல் பெருகியது**

இங்கு பட்டம், கடல் ஆகிய எழுவாய்ச் சொற்கள் முறையே பறந்தது, பெருகியது என்ற பயனிலைச் சொற்களுடன் இயைபான தொடர்பு கொண்டு கருத்துள்ள வாக்கியமாகக் காணப்படுகிறது.

**இ. குருவி கூடு** **ஈ. பசு பால்**

இங்கே தரப்பட்டுள்ளவை கருத்துள்ளவை அல்ல. பயனிலையுடன் இயைபான தொடர்பு கொள்ளவில்லை. வாக்கியம் முற்றுப் பெறும்போது கருத்துள்ள வாக்கியம் பெறப்படும்.

**க. எழுவாய், பயனிலை இயைவுபட ஐந்து வாக்கியம் எழுதுங்கள்.**

(உ-ம்) மாலதி கடலை சாப்பிட்டாள்.

1. …………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………
3. …………………………………………………………………………………………
4. …………………………………………………………………………………………..
5. …………………………………………………………………………………………

## திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபு

✶ திணை இருவகைப்படும்.

**1. உயர்திணை** **2. அஃறிணை**

1. உயர்திணை - மனிதரைச் சுட்டும் பெயர்கள்.
2. அஃறிணை - மனிதர் அல்லாத ஏனைய உயிருள்ள உயிரற்ற பெயர் அனைத்தையும் சுட்டும் பெயர்கள்.

✓ உயர்திணை வாக்கியம் - மாலதி பூப் பறித்தாள்.

✓ அஃறிணை வாக்கியம் - மாடு புல் மேய்ந்தது.

**கா. அஃறிணை, உயர்திணைச் சொற்களை வகைப்படுத்துக.**

தம்பி, பூனை, பசு, அரசி, பருந்து, புலவர், தபாற்காரன், பூச்சி, பாம்பு, வாழை

| | உயர் திணை | அஃறிணை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

## பால்

✶ பெயர்ச் சொற்கள் பால் அடிப்படையில் ஐந்து வகைப்படும்.

**கி. கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பால் அடிப்படையில் வகைப் படுத்துக.**

(உ-ம்) பெண்பால் தங்கை உயர்திணை ஒருமை

1. ஆண்பால் புலவர் ……………………. ………………..
2. பெண்பால் உழத்தி ……………………. ………………..
3. பலர்பால் மீனவர்கள் ……………………. ………………….
4. ஒன்றன்பால் எருது ………………………. ………………….
5. பலவின்பால் எறும்புகள் ……………………. …………………..

Agaram Dhines

**கீ. பின்வருவனவற்றை இயைபு பெற தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| 1. கணவன் வருகிறான் | பெண்பால் வாக்கியம் |
| 2. மனைவி சமைத்தாள் | பலவின்பால் வாக்கியம் |
| 3. விவசாயிகள் உழுதனர் | ஆண்பால் வாக்கியம் |
| 4. குதிரை கனைத்தது | பலர்பால் வாக்கியம் |
| 5. பசுக்கள் கதறுகின்றன. | ஒன்றன்பால் வாக்கியம் |

## எண்

✶ பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பவை எண்கள். அவை ஒருமை, பன்மை என இரு வகைப்படும். ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை. ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைக் குறிப்பது பன்மை.

✶ பெயர்ச் சொற்கள் ஒருமை, பன்மை என வகைப்படுத்தல் எண் எனப்படும்.

1. பாம்பு ஓடியது ஒருமை வாக்கியம் (பாம்பு - ஒருமை)
2. நரிகள் ஊளையிட்டன பன்மை வாக்கியம் (நரிகள் - பன்மை)

**கு. ஒருமை, பன்மை வாக்கியங்கள் ஐந்து எழுதுங்கள்.**

| | ஒருமை வாக்கியம் | பன்மை வாக்கியம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

Agaram.D

## இடம்

✶ வாக்கியங்களில் சொற்கள் வரும் இடங்களைக் கொண்டு அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகையாகப் பிரிக்கப்படும்.

✶ பேசுகின்றவர் தன்மை இடம், அதைக் கேட்பவர் முன்னிலை இடம், யாரைப் பற்றி அல்லது எதைப் பற்றிப் பேசுகிறோமோ அவர் அல்லது அது படர்க்கை இடம்.

மூவிடப் பெயர்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவாகும்.

நான், யான்- தன்மை ஒருமை

நாம், யாம்- தன்மை பன்மை

நீ, நீர்- முன்னிலை ஒருமை

நீவிர், நீங்கள் - முன்னிலைப் பன்மை

அவன், அவள், அது - படர்க்கை ஒருமை

அவர்கள், அவைகள் - படர்க்கைப் பன்மை

**கூ. பின்வருவனவற்றை நிரப்புங்கள்.**

(உ-ம்) நான் ஓடுகிறேன் - தன்மை ஒருமை

1. நாங்கள் போகிறோம் ……………………………………….
2. நான் படிக்கிறேன் ……………………………………….
3. நீ வருகிறாய் ……………………………………….
4. நீங்கள் செல்லுங்கள் ……………………………………….
5. அவன் சென்றான் ……………………………………….
6. அது வருகிறது ……………………………………….
7. அவை சென்றன ……………………………………….

Dhines

## காலம்

வினை (வேலை) நடைபெறும் நேரத்தைக் குறிப்பது. இது மூன்றுவகைப்படும்.

1. **இறந்தகாலம்** - முடிந்த வேலை
2. **நிகழ்காலம்** - செய்கின்ற வேலை
3. **எதிர்காலம்** - இனிமேல் செய்யும் வேலை

| **வினை செயல்** | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|
| செய் | செய்தாள் | செய்கிறாள் | செய்வாள் |
| படி | படித்தேன் | படிக்கிறேன் | படிப்பேன் |
| அழு | அழுதாய் | அழுகிறாய் | அழுவாய் |

**கெ. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.**

| **வினை/செயல்** | | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|---|
| 1. | உழு | உழுதான் | | |
| 2. | ஆடு | | | ஆடுவாள் |
| 3. | நீந்து | | நீந்துகிறாள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | எழுது | | எழுதுகிறாள் | |
| 5. | பாடி | பாடினாள் | | |

**கே. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைக் கொண்டு தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.**

1. பாத்திமா பாடசாலைக்குப் போனாள்.
2. நீங்கள் பாடசாலைக்கு வருகிறீர்கள்.
3. கண்ணன் கடிதம் படித்தான்.
4. பாம்பு படமெடுத்து ஆடும்.
5. காகம் முட்டையை அடைகாக்கிறது.
6. குரங்குகள் நன்கு சேட்டை செய்தன.
7. பாரதி இனிய பாடல்களைப் பாடினான்.
8. வாழைமரம் இனிய பழத்தைத் தருகிறது.

| எழுவாய் | | பயனிலை | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |
| 8. | | | | | | | |

Agaram Dhines